



திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வடக்கு மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுகிலும் கழகத்தினர் – பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் உற்சாக வரவேற்பு அளித்தபோது எடுத்த படம்.

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் – சைதை சாதிக் சிறப்புரை !

# பம்மல் தெற்கு பகுதி 10வது வார்டு தி.மு.க. சார்பில் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் !

## வே.கருணாநிதி வரவேற்புரை ! எச். முகமது அப்பாஸ் தலைமை !

சென்னை அக் :22 -

காஞ்சி வடக்கு மாவட்டம்,பம்மல் தெற்கு பகுதி 10 வார்டு தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் இன்று ( 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை ) மாலை 5 மணியளவில் முத்துமாரியம்மன் கோவில் தெரு, முங்கில்ஏரியில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு பம்மல் தெற்கு பகுதி 10 வது வட்ட கழகச் செயலாளர் எச்.முகமது அப்பாஸ் தலைமை ஏற்கிறார்.

பேராசிரியர் எல்.பிரபு, ப.காளேஸ்வரன்,ஆர். உமாசங்கர்,என். பன்னீர்செல்வம் , துரை இளங்கோவன், பா. கவிதா, பா.டில்லி, பி.ஜே.வேந்தன், என்.கே.ரவிச்சந்திரன், இரா.கந்தவேலு, ஆர்.கோகுல், சு.மனோகரன்,க.சம்பத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளரும் மண்டல குழு தலைவருமான வே.கருணாநிதி, 10வது வார்டு மாமன்ற உறுப்பினர் கணக்கு குழுத் தலைவர் எ.மதினாபேகம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர், நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக் ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரை யாற்றுகின்றனர்.

இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.,மேயர் க.வசந்தகு மாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், தலைமை கழக பேச்சாளர் முகமது இப்ராகிம்,பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சதீஷ், மாநகரக் கழக துணை செயலாளர் இரா. நரேஷ் கண்ணா, எஸ். கே.நெப்போலியன், வி.ரவிச்சந்திரன், சத்திய பிரபு,ஏ.கல்யாணி டில்லி எம்.சி., வட்டச் செயலாளர் மு.இன்பசேகர் எம்.சி., ரம்யா சத்திய பிரபு எம்.சி., சத்யா மதியழகன், வட்டக் கழக செயலாளர்கள் அண்ணா வெங்கடேசன், வி.எஸ். ஜெகநாதன்,என். காந்தி, எம்.சுகுமா ரன் பி.ரீதரன் உள்ளிட்ட மாவட்ட ,பகுதி,வட்ட கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.

பம்மல் தெற்கு பகுதி 10 வது வட்ட துணைச் செயலாளர் டி.வெங்கடேசன் நன்றி கூறுகிறார். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பம்மல் தெற்கு பகுதி 10வது வட்ட கழக தி.மு.க.வினர் செய்துள்ளனர்.

கழக தொழிலாளர் அணி மாநில துணைச் செயலாளர்

# முனைவர் ஆர்.வரதன் இல்ல விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வாழ்த்துகிறார்!

சென்னை, அக். 22-

கழக தொழிலாளர் அணி மாநில துணைச் செயலாளர் முனைவர் ஆர்.வரதனின் பேரனும், சென்னை கிழக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வ.பிரவின்ராஜன் - புவனேஸ்வரி ஆகியோரின் புதல்வர் வி.பி. மகிழன் முதலாமாண்டு பிறந்த நாள் விழா இன்று (22.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் சென்னை 40, அண்ணா நகர் பார்ம்ஸ் பென்குட் ஹாலில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையேற்று குழந்தை வி.பி.மகிழனை வாழ்த்துகிறார்.

கழக தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ், கழக பொறியாளர் அணி இணைச் செயலாளர் ஆ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ., எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. ப.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் பகுதிச் செயலாளர் கூ.பி.ஜெயின், வட்டச் செயலாளர் சிட்கோ சேகர் உள்ளிட்ட இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், தலைமைக் கழக நிர்வா கிகள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழகச் செயல்வீரர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்ற னர்.

முனைவர் ஆர்.வரதன், தேன்மொழி வரதன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

78வது வட்டம்:செயற்குழு உறுப்பினர்

# மா.ஜெயக்குமார் தந்தை சி.மாயவன் படத்திறப்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைக்கிறார்!

சென்னை அக்:22

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு பகுதி 78வது வட்ட செயற்குழு உறுப்பினர் மா. ஜெயக்குமாரின் தந்தை முன்னாள் வட்ட கழக துணைச் செயலாளர் மறைந்த சி.மாயவன் அவர்களின் திருவுருவப் படத்தை சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு திறந்து வைக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சி இன்று( 22.10.2023 ஞாயிற்றுக்கிழமை)மாலை 6 மணிக்கு மேல் நடைபெற உள்ளது.

ஆகையால் 78 வது வட்ட கழக நிர்வாகிகள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு, கேட்டுக்கொள்ளப்படுகிறது.(இடம்) சச்சிதானந்தன் தெரு குடிசைப்பகுதி.

# 4.25 கிலோ தங்க நகை திருட்டு!

## ஒருவர் கைது!

சென்னை, அக்.22-

திருவல்லிக்கேணி பகுதியில் அடகு கடையில் 4.25 கிலோ தங்க நகைகள் மற்றும் பணம் ரூ.50 இலட்சம் கையாடல் செய்த வழக்கில் ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை, பூங்கா நகர், வெங்கடாச்சல முதலி தெருவில் வசிக்கும் விமல்குமார் ஜெயின், வ/63, த/பெ.சூரஜ்மால் என்பவர் திருவல்லி க்கேணி, வி.ஆர். பிள்ளை தெருவில் அடகு கடை நடத்தி வருகிறார். இந்நிலையில் விமல்குமார் ஜெயின், சில மாதங்களுக்கு முன்பு மேற்படி கடையின் கணக்கு வழக்குகளை சரி பார்த்தபோது, கடையில் இருந்த 4.25 கிலோ எடை கொண்ட தங்க நகைகள் மற்றும் பணம் ரூ.50 இலட்சம் கையாடல் செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. இது குறித்து விமல்குமார் ஜெயின் D3 ஐஸ் அவுஸ் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

D3 ஐஸ் அவுஸ் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், விமல்குமார் ஜெயின் மேற்படி கடையில் சுமார் 15 வருடங்களாக பணிபுரிந்து வரும் ராஜஸ்தானைச் சேர்ந்த மங்கிலால் என்பவரிடம் கடையின் பொறுப்பை ஒப்படைத்து கடையை பார்த்துக் கொள்ள கூறி இருந்ததும், மங்கிலால் மற்றொரு ஊழியர் குருபிரசாத் என்பவருடன் சேர்ந்து, தங்க நகைகள் மற்றும் பணத்தை கையாடல் செய்தது தெரியவந்தது. அதன்பேரில், காவல் குழுவினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டு, மேற்படி குற்ற சம்ப வத்தில் ஈடுபட்ட குருபிரசாத் என்பவரை கைது செய்தனர்.

இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள முக்கிய குற்றவாளியான மங்கிலால் என்பவரை பிடிக்க காவல் குழு வினர் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட குருபிரசாத், விசாரணைக்குப் பின்னர் நேற்று முன்தினம் (20.10.2023) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

துறைமுகம் மேற்கு பகுதி

# மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. வாழ்த்தினர்!

சென்னை, அக். 22

சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி, மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.சேகர் எஸ்.லதா ஆகியோரின் புதல்வி எஸ்.சுபஸ்ரீ சுபஸ்ரீக்கும், சென்னை அசோக் நகர் என்.பத்ரிநாத் பி.செந்தாமரை ஆகியோரின் புதல்வர் எம்.பி.அபிஷேக் நிரஞ்சனுக்கும் திருமணம் வரவேற்பு விழா எம்.எஸ். ஆர்.மஹால், எண்.9. ராஜா அண்ணாமலை ரோடு, புரசைவாக்கம், தாச பிரகாஷ் அருகில் நடைபெற்றது.

திருமண விழாவில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர், இந்து சமயம் அறநிலைய துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சர் பி. கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு செயலாளர், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், தலைமை நிலைய செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் நல வாரியம் தலைவர் துறைமுகம் காஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே. ஜே.எபிநேசர், கழக செய்தி தொடர்பாளர் தமிழன் பிரசன்னா, பத்திரிகை ஆசிரியர் நக்கீரன் கோபால், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார், பகுதி செயலாளர்கள் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், சிட்கோ வே.வாசு மற்றும் ஜி.எம்.தேவன், பி. ஸ்ரீராமுலு, கூ.பி.ஜெயின், பி.கே.மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் ஆர். கலைச்செல்வி, மே.ஜனார்த்தனம், நா.சுந்தரம், எம். முத்துக்குமார், எஸ்.சந்தியாகு, எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, சேப்பாக்கம் பிரபாகரன், டி. சதீஷ்குமார், எல்.சத்தியநாரயணன், சு.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம் , டி.ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா. பார்த்திபன், எஸ்.ராஜேஷ் ஜெயின், வெ.பரிமளம், நவீன் டாஹா, எல்.எழிலரசு, நா.ரஞ்சித் விஜயாலயன், லண்டன் முருகன், எம்.வி.ஆர்.சரவணன், ஜி. மாசிலாமணி, வி.அசோக் குமார் , வி.எம்.முருகவேல் , எம்.நாராயணன், ஏ.பி.எஸ். செந்தில், டி.போஸ், சங்கர், எம்.சுரேஷ், பா.சுகுமார், பி.விஜயகுமார், எம்.வினாயகம் , பி.பிரதிப்குமார், எல்.சம்பத்குமார், பா.ஜெகதீஷ், எம்.எஸ்.அசாருதீன், எஸ்.ஜெகன்நாத், எல்.சாந்திலால், எஸ்.அசோக் ஜெயின், வினோத் கோத்தாரி, டி.சேகர், ஆதில் ஹேமந்த் அண்ணாதுரை, நரேந்திரன் அண்ணாதுரை, பூக்கடை வெங்கடேசன், நா.மோகன், திருப்பதி, எம்.சண்முகசுந்தரம், செந்தில்குமார், பூக்கடை ராஜா, டி. ரமேஷ், வளர்மதி, அனிதா, மோகன் லால், சுமதி, மலர் உமா, கே.ஜி.துளசிராமன், எஸ்.இ.டி.சி. காந்தி, டி. வேலு, கே.பவானி, ஆவின் சந்திரசேகர், பா.முத்துக்குமார், கேபிள் சங்கர், பிண்டட்டு ஜெயின், ரூபாராம் பட்டேல், சு.அண்ணாதாசன், பூவாட அசோக்குமார், எஸ் ராஜூ, எம். உதயா, தமிழ் முருகன், எஸ். பாண்டுரங்கன், எஸ்.கே. பாரூக் சுல்தான், சாய் பவன் குமார், லிங்கேஷ், கிஷோர், அபினவ், கருப்பையா, டெலிபோன் பாபு, எஸ்.எம். எழில், பாலு, எம்.சரவணன், அலெக்ஸ் பாண்டியன் , எஸ்.சந்திரசேகர், ராமு, பன்னீர், சுந்தர மூர்த்திமற்றும் பலர் கலந்து கொண்டனர். பகுதி துணை செயலாளர் கே.ஆர்.அபரஞ்சி, வட்ட கழகச் செயலாளர் பா.அண்ணாதுரை ஆகியோர் நன்றி கூறினர்.

கழக பாடகர் தேவகானம்ராஜாவின் டி.ஜே.இன்னிசை நடைபெற்றது.

இ.கருணாநிதி எம்.எல்.ஏ சிறப்புரை!

# பல்லாவரம் (வடக்கு) பாக முகவர் செயல்வீரர்கள் கூட்டம்!

## பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை அறிக்கை

பல்லவபுரம், அக். 22 -

பல்லவபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பாக முகவர்கள் செயல் வீரர்கள் கூட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன அதன் ஒரு பகுதியாக பல்லவபுரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது :-

பல்லவபுரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பாக வட்டங்கள் தோறும் பாகங்கள் வாரியாக பாக செயல்வீரர்கள் கூட்டம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன மொத்தம் உள்ள 69 பூத்துக்களில் 40க்கு மேற்பட்ட பூத்துகள் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்று முடிந்தன இக்கூட்டங்களில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொகுதி பொறுப்பாளர் மருத்துவர் மாநில துணைச் செயலாளர் எஸ்.ஏ .ரமேஷ், மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு வருகிற நாடாளுமன்றத் தேர்தலில் பணியாற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

அதைத் தொடர்ந்து இன்று (22-10- 23- ஞாயிறு) 9,14,15,16 ,17 மற்றும் 18 வது வார்டுகளில் பாகசெயல் வீரர்கள் கூட்டம் நடைபெற உள்ளன காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரையும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையும் வார்டு எண் 9,14,18 ஆகிய ஆகிய வார்டுகளில் ஆறு பாக செயல் கூட்டம் பாக முகவர்கள் தலைமையிலும் ஒத்த கதைகள் நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற உள்ள கூட்டங்களில் மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட பிரதிநிதி மாமன்ற உறுப்பினரும் மாநகரத் துணைச் செயலாளருமான இரா. நரேஷ் கண்ணா, பகுதி கழக பொறுப்பாளர்கள் ச.சிவக்குமார், இரா .சேகர், ஜி. கருணாமூர்த்தி, எம். இளங்கோ ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற உள்ளன.

அதைத் தொடர்ந்து வார்டு எண்15, 16 ,மற்றும்17 வது வார்டு ஆகிய வார்டுகளில் எட்டு பாகங்களில் செயல் வீரர்களுக்கு கூட்டம் பாக முகவர்கள் தலைமையில் மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட பிரதிநிதி ச.பிரபு பகுதிக்காக பொறுப்பாளர்கள் கோ.ஜானகிராமன், எஸ். நெடுஞ்செயன் ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற உள்ள இக்கூட்டங்களில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் எவ்வாறு தேர்தல் களத்தில் பணியாற்றுவது என்பது குறித்தும் குறிப்பாக வாக்குச்சாவடி முகவர்கள் நூறு வாக்காளருக்கு ஒருவர் என நியமிக்கப்பட்டவர்களை வரும் தேர்தல் களத்தில் எவ்வாறு தேர்தல் பணி ஆற்று வைப்பது என்பது குறித்தும் கழக அரசின் திட்டங்களை விளக்கி தேர்தல் களத்தில் சிறப்பாக பணியாற்றுவது எவ்வாறு என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கி கூட்டங்களில் சிறப்பு உரையாற்றுகிறார்.

எனவே வட்ட கழகச் செயலாளர்கள் தங்கள் வட்டத்தில் உள்ள பாக முகவர்கள் தலைமையில் சிறப்பாக பாகம் செயல் வீரர்கள் கூட்டத்தை கூட்டிட வேண்டும் அக்கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பாகத்தில் உள்ள கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பிதழ் தந்து அவர்களை கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.ஆர்.பி.சீனிவாசன்

### அக்டோபர் 22 (2022)



இளமைக் காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக பணியாற்றியவர்.

நம்பரை ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


பெருநகர சென்னை மாநகராட்சி

கலைஞர் 100 1924 - 2023

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

**2023- ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**


**மேயர்**

செ.ம.தொ.இ / 1227 / வரைகலை / 2023


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடலூர் இரெ. இளம்வழுதி

### அக்டோபர் 22 (1970)



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திராவிடர் கழக மாணவர் அமைப்புக்குச் செயலாளராக இருந்தவர்.

தி.மு.க. தொடங்கிய நாளிலிருந்து பல்வேறு பொறுப்புகளில் செயல்பட்டவர்.

'பொன்மொழி' என்ற கழக இதழை தனது இறுதி காலத்தில் தொடங்கி நடத்தினார்.

தலைசிறந்த வழக்கறிஞராக, தலைமைக் கழகப் பேச்சாளராக விளங்கினார்.

1967ல் சட்டப்பேரவை உறுப்பினராக பணியாற்றியுள்ளார். அறிஞர் அண்ணாவால் 'கறுப்பு இளவரசர்' என அழைக்கப்பட்ட இவர், தலைவர் கலைஞரின் ஆருயிர் நண்பர். இறுதி மூச்சு வரை, இயக்கப் பணியாற்றிய பகுத்தறிவு பண்பாளர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.